DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No. 5/2017

Deposition of witness for: PW - 8

Name : அம்பிகா Father/Husband Name: அமல்சுந்தராஜ்

Village : Taluk :

Calling : Age :

Date : 05.05.2025

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 05.05.2025.

**( சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை பதிவு செய்யப்பட்டது )**

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

நான் கடந்த 2016ம் ஆண்டு மேலூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து விருப்ப ஓய்வு பெற்று தற்போது திண்டுக்கல்லில் குடியிருந்து வருகிறேன். 15.02.2014 அன்று 14.30 மணிக்கு நிலைய பொறுப்பில் இருந்தபோது ராஜலெட்சுமி க/பெ, திருமால்மணி என்பவர் மதுரை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்திலிருந்து தொலைபேசி மூலம் தகவலை பெற்று பின்னர் காவல் நிலையம் வந்து புகார் கொடுத்தன்பேரில் நிலைய குற்ற 10/16, பெண்கள் துண்புறுத்தலை தடுக்கும் சட்டம் பிரிவு 4 மற்றும் இதச பிரிவு 506(1)ன் கீழ் வழக்கு பதிவு செய்தேன் **( அந்த முதல் தகவல் அறிக்கை அசாஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது ).**

பின்னர் முதல் தகவல் அறிக்கையுடன் புகாரினை இனைத்து கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தும், ஒரு நகலை எனது புலன்விசாரணைக்கு எடுத்துக்கொண்டும், அன்றைய தினம் சம்பவ இடம் சென்று சாட்சிகள் ராஜலெட்சுமி மற்றும் ராமமூர்த்தி, மலேஸ்வரி, ஜெயராமன், இந்திரன், ராமசாமி, பஞ்சு, ஆகியோர்களை தனி தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். எனது புலன் விசாரணையில் 4ம் எதிரி சபரி என்பவர் வழக்கு சம்பவத்தில் ஈடுபடவில்லை என எனது

புலன்விசாரணையில் தெரியவருவதால் எதிரியை நீக்கம் செய்து 15.02.2016 ம் தேதி எதிரி நீக்கல் அறிக்கை தாக்கல் செய்தேன். ( அந்த எதிரி நீக்கல் அறிக்கை அசாஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது ). பின்னர் வழக்கு சம்பவத்தில் தொடர்புடைய மற்ற எதிரிகள் மீது பெண்கள் துண்புறுத்தலை தடுக்கும் சட்டம் பிரிவு 4 மற்றும் இதச பிரிவு 506(1)ன் கீழ் 20.03.2016 ம் தேதிகுற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை

15.02.2016 ல் தேதியில் நேரடியாக மேலூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான். மதுரை மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் புகார் கொடுக்கப்பட்டு தொலைபேசி மூலம் அறிவிப்பை பெற்று கொண்டு பின்னர் அந்த மனுவில் என்னிடம் காவல் நிலையத்தில் கொடுத்து நான் புகாரை பெற்றுக்கொண்டேன். அன்றையதினமே நான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன் என்றால் சரிதான். ஒரு புகார் பெற்றுக்கொண்டு இரு தரப்பினரையும் விசாரணை செய்வது முறை என்றால் சரிதான், இதற்கு முன்பே புகார் கொடுத்து காவல் நிலையத்தில் சமரசம் செய்து அனுப்பி வைக்கப்பட்டது, இந்த புகார் 2 வது முறையாகும். இந்த சம்பவம் குறித்து நேரடியாக எதுவும் தெரியாது, காவல் கண்காணிப்பாளரிடம் கொடுத்த மனுவின் பேரில்தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன் என்றால் சரிதான்.

2) பொதுவாக குடும்ப சம்மந்தமாக புகார் வந்தால் இருதரப்பினரையும் விசாரித்த பின்புதான் வழக்கு பதிவு செய்யப்படும் என்றால் சரிதான். அன்றைய தேதியில் நான் சொல்வதுபோல் எதிரிகள் அசா 1 யை எந்த கொடுமையும் செய்யவில்லை, அவர் கொடுத்த பொய்யான புகாரின் பேரில் முதல் அறிக்கை பதிவு செய்து வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றாலும், அவர்கள் எந்த கொடுமையும் செய்யவில்லை, நான் முறைப்படி விசாரணை செய்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யவில்லை என்றாலும், இருதரப்பினரையும் அழைத்து முறையாக விசாரணை செய்திருந்தால் எதிரிகள் குற்றமற்றவர்கள் என தெரிய வந்திருக்கும் என்றால் சரியல்ல. குடும்ப சம்மந்தமாக புகார் வந்தால் சமூக நலத்துறை அலுவலகத்திற்கு அனுப்பபடும் என்றால் சரிதான்.

அவ்வாறு இந்த வழக்கில் சமூக நலத்துறைக்கு அனுப்பாமல் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் முன்பே தந்த புகாரில் இருதரப்பினரையும் சமரசம் செய்து அனுப்பி வைத்து அவர்கள் சேர்ந்து வாழாமல் இருந்து இந்த புகார் கொடுக்கப்பட்டது.